அப்பூதியடிகள் திருநாவுக்கரசரின் மீது கொண்ட இறைபக்தியின் கதையை நிரல்படுத்தி எண்களிட்டு எழுதுக.

	மூத்த புதல்வனான திருநாவுக்கரசைக் கொல்லையில் இருக்கும் வாழை மரத்திலிருந்து இலையை அறுத்து எடுத்து வரும்படி அனுப்பினார் அருள்மொழி அம்மையார்.
	அப்பூதியடிகள் திருநாவுக்கரசரைக் கண்டதும் அவரது திருவடிகளில் வீழ்ந்து வணங்கி ஆனந்தமடைந்தார்.
	இருப்பினும், அவன் இறந்த செய்தியைக் கேட்ட திருநாவுக்கரசர் மூத்த திருநாவுக்கரசின் உடல் இருந்த இடம் சென்றார்.
	அவனும் விரைந்து சென்று நல்ல குருத்தை அறுக்கும் பொழுது ஒரு நல்ல பாம்பு அவன் கையைத் தீண்டியது.
	சிவபிரானின் அருளால் பாம்பு தீண்டிய நஞ்சு அகன்றது. மூத்த திருநாவுகரசு எழுந்து நாவரசரை வணங்கினான். நாவரசரும் அவனுக்குப் புனிதத் திருநீற்றை வழங்கி ஆசிர்வதித்தார். அப்பூதியடிகளின் குடும்பத்தினர் திருநாவுகரசரின் வல்லமையைப் போற்றி அவரை வணங்கினர்.
	தனது இல்லத்தில் அமுதுண்ண வேண்டும் என்ற அப்பூதியடிகளின் வேண்டுதலுக்கு இணங்கினார் திருநாவுக்கரசர்.
	மகன் இறந்த செய்தியை மறைத்து, அப்பூதியடிகள் திருநாவுகரசருக்கு விருத்துப் படைப்பதில் முனைப்புக் காட்டினார்.
	இறந்த சிறுவனின் உடலைத் திருக்கோயில் முன் கிடத்தி, பதிகம் பாடினார்.
	விஷம் தலைக்கேறுமுன் இந்தக் குருத்தை அன்னையிடம் சேர்ப்பிக்க ஓடோடி வருகிறான் ; குருத்தை அவரிடம் கொடுத்து விட்டு மயங்கி வீழ்ந்து விட்டான்.
	அப்பூதியடிகளின் மனைவி அருள்மொழி அம்மையார் மிகுந்த மகிழ்ச்சியுடனும் அக்கறையுடனும் அறுசுவை உணவு வகைகளைத் தயார் செய்ய ஆரம்பித்தார்.

LIVEWORKSHEETS

LIVEWORKSHEETS